# <u>பெயர் மாற்றம்</u>

''லீலா, நீ சொல்றதை யோசித்துப் பார்த்துதான் சொல்றியா?''

''ஆமாங்க. நான் நீண்ட நாளா மனசில் வைச்சி நல்லா சிந்திச்சுப் பார்த்துதான் சொல்றேன். நாம் ஊரு உலகத்துக்குத் தெரியும்படியா கல்யாணம் பண்ணிக்கிட்டாத்தான் நல்லது. அதுதான் சரியாகத் தோணுது எனக்கு''.

''நாம் கல்யாணம் பண்ணாமலேயே ஒண்ணா சேர்ந்து இருந்தாலும் யாரும் ஒண்ணும் சொல்லமாட்டாங்க. இத்தனை வயசுக்குப்புறம் நாம் கல்யாணம் பண்ணினா என்ன? கல்யாணம் பண்ணாட்டி என்ன?''.

''ஊரிலே எனக்கும் மதிப்பு குறையாம இருக்கணும் உங்களுக்கும் மரியாதை மாறாம இருக்கணும். இது ரொம்ப முக்கியம். அதனாலதான் நாம் கண்டிப்பா கல்யாணம் பண்ணிக் கொள்ளனும்னு சொல்றேன்''.

''லீலா, இந்த முடிவு வேண்டாம்னு நினைக்கிறேன். எனக்கு ஏற்கனவே ஹார்ட் பிராப்ளம் இருக்குது. நீ ஒரு டாக்டர். நான் இன்னும் எத்தனைக் காலம் உயிரோடிருப்பேன்னு உனக்குத் தெரியும். நான் ரொம்ப நாள் இருப்பேன்னு சொல்ல முடியாது. அப்படி இருக்கும்போது ஏன் திருமணம் செஞ்சிக்கனும்?''.

''எதிர்மறையாக ஏன் நினைக்கனும்? வாழ்க்கையே நம்பிக்கையில்தான் நடக்குது''.

இந்த உரையாடலில் சம்பந்தம் உடையவரில் ஒருத்தி லீலா எனக்கூறத் தேவையில்லை. லீலாவுக்கு இப்போது வயது ஐம்பதைத் தாண்டிவிட்டது. அவளது இளமைக் காலத்தில் பல காரணங்களால் திருமணம் கை கூடாமற் போய்விட்டது. அவள் டாக்டர் என்பதால் அதற்கு ஏற்ற படித்த மாப்பிள்ளை கிடைக்கவில்லை. லீலாவின் தந்தை அவளது முப்பதாவது வயதில் மறைந்துவிட்டார்.

தந்தையின் மறைவு லீலாவின் வாழ்வில் பேரிழப்பு என்பதை லீலா இன்னும்கூட இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் கூட - உணர்கிறாள். இந்த இருபது வருட காலத்தில் லீலாவின் தாய்தான் அவளுக்குத் துணையாக இருந்தாள். தான் ஒரு டாக்டர் என்பதால், தனக்கு டாக்டர் மாப்பிள்ளைதான் வேண்டும் என்று தீர்மானமாகக் கூறிவிட்டாள். ஆனால் டாக்டர் யாரும் அவளைப் பெண் கேட்டு வரவில்லை. லீலாவின் தாய்மாமா கூட நாலைந்து இடங்களுக்கு அலைந்து டாக்டர் மாப்பிள்ளை தேடும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டபோதிலும் வெற்றிகிட்டவில்லை. சாதி, மதம், அந்தஸ்து வேறுபாடுகள் குறுக்கே நின்று, லீலாவுடைய திருமணம் தடைப்பட்டுப்போய்விட்டது. இறுதியில் திருமணமே வேண்டாம் என்ற முடிவுக்கு லீலா வந்து விட்டாள்.

மருத்துவத் தொழிலில் முழு மூச்சாக இறங்கிவிட்டாள். மருத்துவத் தொழில் புனிதமான தொழில் என்றும், அதனை ஒரு அர்ப்பணிப்பு உணர்வோடு மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் படிப்பு முடிந்து, மருத்துவக் கல்லூரியிலிருந்து வெளியேறும்போது உறுதிமொழி எடுத்துக் கொண்டதை லீலா ஒருபோதும் மறக்கவில்லை. சேவை மனப்பான்மையுடன், தியாக சிந்தையுடன் தன்னை நாடிவரும் பிணியாளிகளுக்கு முகம் சுழிக்காமல் சிகிச்சை அளித்தாள். நடுத்தர மக்களுக்குக் குறைந்த கட்டணத்திலும், ஏழை மக்கள் எனில் இலவசமாகவும் மருத்துவம் பார்த்தாள். மக்கள் அவளது சேவையைப் பாராட்டினார்கள். உயிர்காக்கும் தெய்வமாக அவளைப் போற்றினார்கள். அவளது தொழிலில் அவளுக்குக் கிடைத்த மனநிறைவு வேறெதிலும் கிட்டவில்லை.

லீலாவின் தாய் அவளுக்குத் துணையாக இருந்ததால் லீலாவுக்குத் திருமணம் நடக்காமல் போய்விட்டது என்ற வருத்தம் அவ்வளவாக ஏற்படவில்லை. தனிமையை உணர அவசியம் எழவில்லை. எப்போதும் வீட்டிலும், மருத்துவமனையிலும் வேண்டிய அளவுக்கு வேலைக்காரர், டிரைவர், வாட்சுமேன் என்று உதவிக்கு ஒரு பட்டாளமே இருந்தது. கண்டிப்புடனும் அதே நேரம் கருணையுடனும் லீலா நடந்துகொண்டாள். அவள் கஞ்சத்தனம் இல்லாமல், வேலையாட்களுக்குத் தாராளமாகச் செலவு செய்து வந்ததால் யாவரும் உண்மையான ஊழியர்களாக இருந்து அவளுக்கு மதிப்பும், மரியாதையும் அளித்து வந்தனர். காலையிலிருந்து இரவு வரை அவளது மருத்துவமனையில் கூட்டம் அலைமோதும். சிலநாட்களில் நள்ளிரவிலும் எமர்ஜென்ஸி கேசுகள் வரும். தூக்கத்தைத் தியாகம் செய்துவிட்டு அந்த நேரத்திலும் புன்முறுவல் தவழும் இன்முகத்தோடு நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சை அளித்துவந்ததை அந்த ஊரே வியந்து பாராட்டியது. சேவை மனப்பாண்மையுடன் தொழிலில் ஈடுபாடு கொண்டதினால், இல்லற வாழ்க்கை இல்லாமற்போனது. ஒரு பெரிய இழப்பாகத் தோன்றவில்லை.

லீலாவின் ஐம்பதாவது வயதில் அவள் அம்மாவும் அவளைத் தனிமரமாகத் தவிக்கவிட்டு மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டாள். தாயாரின் மறைவுக்குப் பின்புதான் லீலாவுக்கு வாழ்க்கை சூன்யமாக, வெறுமையாகத் தோன்றத் துவங்கியது. தன்னை நேசிக்க யாருமில்லை என உணர ஆரம்பித்தாள். தனிமை அவளுக்குக் கொல்லும் சுமையாக இருந்து வாட்டி வதைத்தது.

ஐம்பது வயதிலும் அவளது இளமையும், அழகும் குறையவில்லை. உணவுப் பழக்கமும், உடற்பயிற்சியும், கட்டுப்பாடான வாழ்க்கையும் அவளது இளமைத் தோற்றத்தைக் கட்டிக் காப்பதற்குக் காரணங்களாக விளங்கியுள்ளன என்றுதான் கூறவேண்டும். கண்ணியமாக உடை உடுத்துவதிலும், தன்னை அழகுப்படுத்திக் கொள்வதிலும் கன்னிப்பருவத்தில் காட்டிய ஆர்வத்தினை இன்றளவும் தொடர்ந்து காட்டிவந்து இருக்கிறாள். சோம்பேறித் தனத்திற்கு ஒரு சிறிதும் இடம் அளிக்காமல் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருந்துவந்துள்ளாள். லீலாவின் நடை, உடை, பாவனை எல்லாமே வயது வேறுபாடின்றி எல்லாப் பெண்களும் விரும்பிப் போற்றும் வண்ணம் இருந்தது. நற்பண்புகளின் மொத்த உருவமாக லீலா மற்றவருக்கு காட்சி அளித்தாள்.

-------------------------

லீலாவின் தாயார் மறைந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்ட போதுதான் அவள் இருந்த ஊருக்கு மாவட்ட நீதிபதியாக மாறுதலாகி வந்தார் ரவீந்தர். ரவீந்தர் ஓய்வு பெறுவதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகளே இருந்தன. ரவீந்தரின் பணியின் தன்மை காரணமாக அவருக்கு வெளியுலகத் தொடர்பு அதிகம் கிடையாது. அவருக்கு என்று அரசால் ஒதுக்கப்பட்ட வீட்டில் தங்கியிருந்தார். அவர் குடும்பத்துடன் இருக்கிறாரா, தனியாக இருக்கிறாரா என்பது கூட யாருக்கும் தெரியாது. அவரது உதவியாளர்களும் அவரைப்பற்றி ஒரு வார்த்தைக் கூட வெளியிடக்கூடாது என்று கட்டளை பிறப்பித்திருந்ததால் யார் எது கேட்டாலும் ‘தெரியாது’ என்றே பதில் அளித்தனர்.

அவரது வேலை நேரம் போக மீதிநேரம் வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தார். எப்போதாவது சிறப்பு விருந்தினராக பள்ளி, கல்லூரி மற்றும் பொது நிறுவனங்களின் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுவார். அவர் வகித்துவந்த பதவிக்குரிய கண்ணியத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் வண்ணம் நடந்து கொண்டார். ரவீந்தர் கண்டிப்பு மிக்கவர், நேர்மையானவர் என்று பெயர் வாங்கியிருந்தார்.

ரவீந்தரின் குடும்பம் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாததற்கு ஒரு காரணம் அவர் வீட்டில் அவர் ஒருவர் மட்டுமே காணப்பட்டார். ஆம்! உண்மையில் ரவீந்தர் தனிமனிதர்தான். திருமணம் ஆனவர்தான் என்ற போதிலும், இளம் வயதிலேயே மனைவி இறந்துவிட்டதால், குழந்தை

பெறாமலேயே இறந்துவிட்டதால், அவருக்கு வாழ்க்கை கசந்துவிட்டது. எதிர்பாராத சோகம் அவரை முற்றிலுமாக மாற்றிவிட்டது. மறுமணம் செய்து கொள்ளாமலேயே தனிக்கட்டையாக வாழ்வு முழுவதையும் கழித்துவிட்டார்.

அந்த ஊருக்கு மாறுதலாகிவந்து இரண்டு மாதங்கள் கழித்து ரவீந்தர் ஒரு விழாவில் கலந்து கொண்டார். டாக்டர் என்ற முறையில் லீலாவும் அவ்விழாவிற்குச் சென்றபோதுதான், ரவீந்தர் லீலாவைச் சந்தித்தார். பின்பு பல நேரங்களில், பல இடங்களில் சந்திக்க நேர்ந்த போதெல்லாம் இருவரும் உரையாடிக்கொண்டனர். இருவருக்கும் நட்பு என்ற முறையில் தொடர்பு வளர்ந்தது.

லீலாவுக்கு ரவீந்தர்மேல் மதிப்பு உயர்ந்தது. ரவீந்தர் குடும்பம் என்று ஒன்று இல்லாமல் தனியாக இருப்பதால், லீலாவின் மனத்தில் ரவீந்தரை மணந்து கொள்ளலாம் என்ற எண்ணம் வேர்விட்டு நாளுக்குநாள் ஆழமாக வளர்ந்தது. லீலாவை ரவீந்தர் சந்திக்க வரும்போது எல்லாம் தனது எண்ணத்தை லீலா ரவீந்தரிடம் வெளிப்படுத்தினாள். அவர்களிடையே நிகழ்ந்த உரையாடலைத்தான் கதையின் ஆரம்பத்தில் நாம் காண்கிறோம்.

---------------------------------------------------

லீலா தன்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி ரவீந்தரைத் தொடர்ந்து வற்புறுத்தி வந்தாள். ரவீந்தர் வெகுநாட்கள் அதற்கு இசைவு தெரிவிக்காமலேயே இருந்துவந்தார்.

ஆனால் மனிதர்கள் அறிவுப்பூர்வமாக மட்டும் முடிவு எடுத்துவிட சூழ்நிலை விடுவது கிடையாது. பல நேரங்களில் மனிதன் உணர்ச்சி சார்ந்த முடிவையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடுகிறது. ரவீந்தர் திருமணம் செய்ய முன்வராததற்கான காரணம் வெறும் கற்பனையான பயமாக லீலாவுக்குத் தோன்றியது. தான் ஒரு டாக்டர் என்பதே லீலாவிற்கு ரவீந்தரின் அத்தகைய பயம் வீணான பயம் என்று கருதுவதற்குத் தைரியம் அளித்தது. மேலும் தங்களைச் சுற்றியுள்ள சமூகத்தையும் குறித்து பயந்துதான் அதின் அங்கமாக உள்ள ஒவ்வொரு மனிதனும் வாழக்கடமைப்பட்டிருக்கிறான் என்பதையும் சமூகக் கட்டுப்பாடு என்னும் எல்லைக்கு உட்பட்டே தனிமனித சுதந்திரம் அமைகிறது என்பதையும் லீலா, ரவீந்தர் இருவருமே நன்கு உணர்ந்திருந்தனர்.

திருமண வாழ்க்கையின் முக்கிய நோக்கமே கணவனும், மனைவியும் முதுமை நிலையை அடையும் போதுதான் நிறைவுபெறுகிறது. மூப்பு காரணமாக உடல் வலுவிழந்து தளர்ந்து போய், அதன் விளைவாக உள்ளமும் சோர்வு அடையும்போதுதான் வாழ்க்கைத் துணையின் தேவையானது தம்பதியர் இருவராலும் உணரப்படுகிறது. நரை திரை தோன்றி, புலன்கள் யாவும் திறன் குன்றிப் போகும் வேளையில்தான் இல்லறத்தில் ஈடுபட்ட இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக துணைவனும், துணைவியுமாக இருக்கவேண்டிய அவசியத்தைப் புரிந்துக் கொள்ள முடிகிறது.

ரவீந்தரும். லீலாவும் வாழ்க்கைப் பாதையின் முடிவில் இருப்பவர்கள். வாழ்வின் விளிம்பிலே நிற்பவர்கள். இப்படிப்பட்ட நிலையில் திருமணம் என்பது உலக நடைமுறைக்கு முரண்பட்டது என்பது இருவருக்கும் தெரிந்துதான் இருந்தது. அதே நேரம் லீலாவின் வாதத்திலும் நியாயம் இருந்தது. பழி சொல்லுக்கும், இழிசொல்லுக்கும் ஆளாவதைத் தவிர்ப்பதற்குத் தீர்வு கண்டுதான் ஆகவேண்டும். ரவீந்தர் நீண்ட நாட்கள் லீலாவின் யோசனையை ஆற, அமர சீர்தூக்கிப் பார்த்தார். முடிவில் லீலாவின் ஆலோசனைப்படி நடப்பதற்குச் சம்மதித்தார்.

ரவீந்தரும், லீலாவும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தது உடற்தேவைகளின் அடிப்படையில் அல்ல. மாறாக, மனித உள்ளங்கள் நாடுகின்ற பாதுகாப்பு உணர்வின் பொருட்டே ஆகும். அன்புக்கும், ஆதரவுக்கும், பரிவுக்கும், பாசத்துக்கும் ஏங்குகின்ற மனங்களின் காரணமாகவும்

திருமணம் செய்து கொள்வது என்று இருவரும் தீர்மானித்தார்கள். ரவீந்தர், லீலா திருமணம், பதிவு திருமணம் என்ற முறையில் சிலருக்கு மட்டும் தெரியும்படி எளிமையாக நடந்தது. லீலா, ரவீந்தரின் வீட்டில் குடியேறினாள். திருமணம் நடந்து கொஞ்ச காலம்தான் ஆயிற்று. மலர்க்கொடி படர்வதற்கு உறுதுணையாக நிற்கும் என்று எண்ணிய கொழுகொம்பு இற்றுப்போன ஒன்று என்பது சிறிதுகாலத்தில் நிஜமாகிவிட்டது நிகழ்வாகிவிட்டது. லீலா தனிமரமாகிவிட்டாள்.

வாழக்கையின் பெரும்பகுதி டாக்ர் செல்வி லீலா என இருந்த பெயர்ப் பலகை, டாக்டர் (திருமதி) லீலா என லீலாவின் வீட்டில் இப்போது தொங்கிக் கொண்டிருக்கிறது. ரவீந்தரை லீலா திருமணம் செய்து கொண்டதற்கு ஒரே பலன் செல்வி என்ற சொல்லுக்குப் பதிலாக திருமதி என்ற சொல் லீலாவின் பெயரோடு சேர்ந்தது மட்டும்தான். பெயரளவில் மாற்றம் என்று சொல்கிறார்களே, அது இதுதானோ? ( முற்றும் )